**பிரிவு இலக்கம்: 10**

பகுதி: I – காலநிலைக்குச் சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தினுடைய சுற்றுச் சூழல் மற்றும் சமூக முகாமைத்துவத் திட்டம் (ஈ. எஸ். ஐ. எம். பி)

**சுற்றுச் சூழல் மற்றும் சமூக பாதிப்புக்களை முகாமைத்துவம் செய்வதற்கான ஒப்பந்தகாரர்களினுடைய பொறுப்புக்கள்**

| சாத்தியமான சுற்றுச் சூழல் மற்றும் சமூக பாதிப்புக்களும் மற்றும் பாதிப்பு மட்டங்களும் | பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய பிரதானமான திட்டச் செயற்பாடுகள். | முன் மொழியப்பட்ட முகாமைத்துவ அளவீடுகள் மற்றும் ஒப்பந்தகாரர்களால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய செயற்பாடுகளுடன் அவற்றை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற விபரமும் | முகாமைத் துவ செலவு | நடைமுறை ப்படுத்தல் | கண்காணி ப்பு |
|---|---|---|---|---|---|
| **1. திட்டத்தை அமுல்படுத்தும் போது உருவாகக் கூடிய பொது மக்களின் புகார்கள் மற்றும் சமுதாயம் ஆதரவளிக்காமை அல்லது மிகக்** | • **பங்குதாரர்கள் மத்தியில் திட்டம் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்தல்.** | 1) திட்டத்தால் பாதிக்கப்பட்ட நபர்களுடன் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட வேண்டும்.<br>2) திட்டம் தொடர்பான ஒரு சிறு விளக்கம், திட்டத்தினுடைய நோக்கம், திட்ட வடிவமைப்பு மற்றும் திட்டத்தால் ஏற்படுத்தப்படும் வெளியீடுகள் முதலானவை ஆவணப்படுத்தப்பட்டு அவற்றை திட்டத்தை அமுல்படுத்தும் பிரதேசங்களில் வசிப்பவர்களிற்கு சமுதாய கலந்துரையாடல் அமர்வுகளினூடாக தெளிவாக விளங்கப்படுத்த வேண்டும் - இந்த விடயத்தைக் கால தாமதம் இன்றி உடனடியாக செய்ய வேண்டும். அதாவது திட்டத்தை ஒப்பந்தகாரர்களிற்கு வழங்குவதற்கு இடையில் செய்து முடிக்க வேண்டும். | பொறியிய ல் செலவு | ஒப்பந்தகா ரர் | மாகாணப் பிரதித் திட்ட அலுவலக சுற்றுச் சூழல் பாதுகாப்பு உத்தியோ கத்தர், சமூகப் பாதுகாப்பு உத்தியோ கத்தர், |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **குறைந்த அளவான ஆதரவு.** | | 3) உருவாகக் கூடிய எல்லாப் பாதிப்புக்களையும் பாதுகாப்பு அபாயங்களையும் திட்ட ஒப்பந்தகாரர்கள் குறிப்பு எடுத்துக் கொள்ள வேண்டும். அதைக் கவனத்திற் கொள்ளும் போது வசிப்பிடதாரிகளினுடைய கண்ணோட்டமும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் சுற்றுச் சூழல் மற்றும் சமூக முகாமைத்துவத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி அவற்றைத் தணிக்க நடவடிக்கைகயையும் எடுக்க வேண்டும்.<br>4) மனக் குறைகள் மற்றும் புகார்களை பதிந்து கொள்வதற்காகவும் அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்காகவும் பதிவுப் புத்தகம் (பரிந்துரைப் பெட்டி) ஒன்றை வைத்திருப்பதுடன் அதனை முறையாகப் பராமரித்துக் கொள்ள வேண்டும்.<br>5) சுற்றுச் சூழல் மற்றும் சமூக முகாமைத்துவத் திட்டத்தின் உடைய பிரதி ஒன்று எந்த நேரத்திலும் கிடைக்கக் கூடிய வகையில் திட்டத்தின் உடைய மேற்பார்வை அலுவலகத்தில் வைத்திருக்கப் பட வேண்டும்.<br>6) ஒப்பந்தகாரர்களுடைய சுற்றுச் சூழல் மற்றும் சமூக பாதுகாப்பு உத்தியோகத்தர் கட்டுப்பாட்டுச் சிக்கல்கள் அல்லது தாக்கங்களைக் குறைத்தல் மற்றும் முகாமை செய்தல், முறையாக சுற்றுச் சூழல் மற்றும் சமூக பாதுகாப்பு அளவீடுகளை உரிய நேரத்தில் செயற்படுத்துதல் முதலானவற்றிற்காக திட்டத்தினுடைய கட்டுமான கால அட்டவணையை பரிசீலிக்க வேண்டும். | | | மற்றும் பால்நிலை அபிவிருத் தி உத்தியோ கத்தர். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **2. பௌதீக மற்றும் கலாசார ரீதியான வளங்களை வெளிக்கொணரல் மற்றும் சேதப்படுத்தல்.** | • **உப திட்டத்தை அமுல்படுத்த களத்தில் இடம்பெறும் தயாரிப்பு வேலைகள்.** | 1. திட்டத்தை அமுல்படுத்தும் வேலைகளில் ஈடுபடுகின்ற போது தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் கலாசார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த பொதீக ரீதியான பொருட்கள் மற்றும் இடங்களை கண்டுபிடித்தால் உடனடியாகப் பின்வருவனவற்றை கட்டாயமாக மேற்கொள்ள வேண்டும்:<br>2. கட்டுமான நடவடிக்கைகளை உடனடியான நிறுத்த வேண்டும்.<br>3. வதிவிட பொறியியலாளருடைய அனுமதியுடன் கண்டுபிடிக்கப் பட்ட முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசத்தை அல்லது களப் பிரதேசத்தை வரைந்து கொள்ள வேண்டும்.<br>4. அகற்றக் கூடிய பொருட்களிற்கு சேதாரம் விளைவிக்காமலும் அல்லது அழிந்து போகாமல் இருப்பதைக் குறைப்பதற்காகவும் முன் கூட்டியே அந்தப் பிரதேசத்தை அல்லது களத்தை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். தற்செயலாக, அகற்றக் கூடிய அல்லது எடுத்துச் செல்லக் கூடிய பழமையான பொருட்கள் அல்லது மிகவும் உணர்திறனான எச்சங்கள் இருந்தால் அதனைப் பொறுப்பேற்கும் அதிகாரி ஒருவர் வந்து அவற்றைப் பொறுப்பேற்கும் வரை இரவு காவலர் ஒருவர் இருக்க வேண்டும்.<br>5. வதிவிட பொறியியலாளருக்கு ஊடாக இருபத்து நான்கு (24) மாணித்தியாலயங்களிற்குள் பொறுப்புடைய அதிகாரிகள், தொல்லியல் திணைக்களம், மற்றும் உள்ளுர் அதிகாரிகளிற்கு அறிவிக்கப்பட வேண்டும். | பொறியியல் செலவு | ஒப்பந்தகாரர் | மாகாணப் பிரதித் திட்ட அலுவலக சுற்றுச் சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர், சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர், மற்றும் பால்நிலை அபிவிருத்தி உத்தியோகத்தர். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 6. கண்டுபிடிக்கப்பட்ட காலப் பகுதி, கண்டுபிடிக்கப்பட்ட நேரம் மற்றும் கண்டுபிடிக்கப்பட்ட திகதி, கண்டுபிடிக்கப்பட்ட இடம், கண்டுபிடிக்கப்பட்டது தொடர்பான விளக்கம், கண்டுபிடிக்கப்பட்ட பொருளின் மதிப்பிடப்பட்ட இடை அளவு மற்றும் கண்டுபிடிக்கப்பட்டதன் பரிமாணம், கண்டுபிடிக்கப்பட்டவற்றிகு தற்காலிகமாக மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு முறைகள் தொடர்பாக அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.<br>7. பின்பற்ற வேண்டிய பொருத்தமான நடைமுறைகளைத் தீர்மானித்து பின்பற்றுவதற்கு முன், பொறுப்பான அதிகாரிகள் அந்த இடத்தைப் பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல் முதலான பொறுப்புகளில் இருப்பார்கள்.<br>8. கண்டுபிடிப்பின் மதிப்பீடு தொல்லியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும். தொல்லியல் திணைக்களத்தினர் தான் பௌதீக கலாசார வளங்களை வெளியேற்ற வேண்டுமா இல்லையா என்ற தீர்மானங்களை எடுப்பார்கள். கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் தொல்லியல் திணைக்களத்தினரால் கூறப்பட்டால், பௌதீக கலாசார வளங்கள் எனக் கண்டுபிடிக்கப்பட்ட குறிப்பிட்ட இடத்தில் இருந்து மேலும் குறிப்பிட்ட அளவு தூரத்திற்கு அகழ்வாராட்சி செய்து அந்த இடத்தை பாதுகாத்தல் அல்லது மேலும் பாதுகாக்கப்பட்ட இடமாக விரிவு படுத்தல் அல்லது பாதுகாக்கப்பட்ட இடப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டதை சுருக்குதல், அல்லது | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | வரையறுக்கப்பட்ட இடமாக தீர்மானித்தல் முதலானவை தொல்லியல் திணைக்களத்தின் அறிவுறுத்தலின் கீழ் ஒப்பந்த காரர்களால் செயற்படுத்தப்பட வேண்டும். எப்படியாயினும் இது சுமார் ஏழு (7) நாட்களுக்குள் நடக்க வேண்டும்.<br>9. தொல்லியல் திணைக்களத்தின் புராதன தொல்லியல் சின்னங்களைப் பாதுகாப்பது தொடர்பான முழுமையான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் தொல்லியல் திணைக்களத்தின் அனுமதி கிடைக்கப் பெற்றதன் பின்னர் மட்டுமே கட்டுமானப் பணிகளைத் தொடர முடியும். மேலும் திட்டத்தினால் நேரடியாக பாதிப்புக்கள் ஏற்படாமல் இருந்திருந்தாலும் இதற்கு முன்னர் அமைக்கப்பட்டிருந்த பழமையான குளியல் படிகள் முதலானவை அமைந்திருந்தாலும் இது தொடர்பான அனுமதியை தொல்லியல் திணைக்களத்தினரிடம் இருந்து கட்டாயாக முன் கூட்டியே பெற்றிருக்க வேண்டும்.<br>10. ஒப்பந்த காரர்கள் மற்றும் அனைத்து தொழிலாளர்களுக்கும் பழைய குழியல் படிகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் பின்பற்ற வேண்டிய முன்னெச்சரிக்கையான விடயங்கள் குறித்தும் அவர்களிற்கு விழிப்புணர்வுகள் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். | | | |
| 3. **இயற்கை வளங்களை அதிகமாக சுரண்டுதல் அல்லது அகழ்தல்** | • **பொருட்களிற்கான மூலாதாரங்கள்** | 1) உரிமம் பெற்ற ஆதாரங்களில் இருந்தோ அல்லது குளத்திற்குச் சொந்தக்காரர்களால் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களிற்கு அமையவோ தான் மணல், ஏனைய அகழ்வுப் பொருட்கள் மற்றும் பிற பொருட்கள் பெறப்படுவதை ஒப்பந்தகாரர் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என | பொறியியல் செலவு | ஒப்பந்தகாரர் | மாகாணப் பிரதித் திட்ட அலுவலக சுற்றுச் சூழல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **அல்லது பிரித்தெடுத்தல்** | | எதிர்பார்க்கப்படுகின்றது. மணல், மண், கிரவல், கரடு முரடான ஏனைய பொருட்கள், கற்கள் உட்பட மற்றும் ஏனைய பொருட்களை ஒப்பந்தகாரர்கள் பெற்றுக் கொள்ளுகின்ற போது அவற்றிற்குத் தேவையான உரிமங்கள், மற்றும் சுற்றுச் சூழல் அனுமதிகளை கட்டாயம் பெற்றிருப்பதோடு அவற்றை பராமரித்துக் கொள்ளவும் வேண்டும் என எதிர்பார்க்கப் படுகின்றது.<br>2) பாதுகாக்கப்பட்ட பகுதிகள் அல்லது மூலங்கள் அல்லது இயற்கைப் பகுதிகளில் இருந்து பொருட்களை அகழ்ந்து எடுப்பது, பெறுவது, சுரண்டுவது முதலானவை கண்டிப்பாகத் தடை செய்யப்பட்டுள்ளது.<br>3) பொருட்களிற்கான மூலங்கள் பெற்றுக் கொள்வது முடிவடைந்த பின்னர் ஒப்பந்ததாரர்களால் வர்த்தகதிற்கு அல்லாமல் அகழ்வுப் பகுதிகள் அல்லது burrow/quarry site பிரதேசங்களைப் பயன்படுத்தினால் பொருட்களை பெறுவதற்கான தளங்களை பின்னர் அதற்கேற்ப சரி செய்ய வேண்டும்.<br>4) முன் தேவைப்படும் உரிமங்களுடன் தொடர்பு பட்ட விபரங்கள், தொடர்புபட்ட எண்ணிக்கைகள், மற்றும் தொடர்புபட்ட அறிக்கைகளை அதன் பிரகாரம் எழுத்து மூலமாக ஒப்பந்ததாரர்களால் முன் கூட்டியே சமர்ப்பிக்க வேண்டும்.<br>5) ஏற்படக் கூடியது என எதிபார்க்கப்படுத் சாத்தியமான இடர்கள் இல்லது விபத்துக்களைக் குறைக்க அல்லது மனிதர்களிற்கு அல்லது விலங்குகளிற்கு விபத்தை அல்லது ஆபத்தை | | | பாதுகாப்பு உத்தியோகத்தர், மற்றும் சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | ஏற்படுத்தாமல் இருப்பதற்காக அகழ்வுக் குழிகளை விளிம்புகளுடன் முடிக்க வேண்டும். அகழ்வுக் குழிகளினுடைய தன்மை மற்றும் அமைவிடம் முதலானவற்றைப் பொறுத்து அகழ்வுக் குழிகளை புணரமைத்தலுக்கு அல்லது மறு சீரமைப்பதற்கு மிகப் பொருத்தமான ஏனைய தெரிவுகள் கருத்திற் கொள்ளப்படும் அல்லது பரிசீலிக்கப்படும். இந்தப் பகுதிகளை வன விலங்குகள் பயன்படுத்துகின்றன என்பதால் அகழ்வுக் குழிகளினுடைய புணரமைத்தல் தொடர்பாக சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டும். மேலதிக தகவல்களிற்கு காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தால் தயாரிக்கப்பட்ட வழிகாட்டல் குறிப்பைப் பார்க்கவும். | | | |
| **4. பயிற்செற்கையினுடைய இழப்பு** | • **தற்செயலாக கட்டுமான செயற்பாடுகள் வறட்சிக் காலங்களிற்கு அப்பாலும் நீடிக்கப்பட்டால்** | 1. அந்தந்தப் பிரதேசத்தில் உள்ள சமுதாயங்களுடன் கலந்துரையாடிய பின்னர் கட்டுமான அட்டவணையை தயார்படுத்தல். கட்டுமான அட்டவணையை தயார் படுத்துகின்ற போது வரண்ட காலம் மற்றும் சிறு போக காலங்களில் வேலைகளைச் செய்ய வேண்டும் என்பதைக் கருத்திற் கொண்டு கால அட்டவணையைத் தயாரித்தல். முன்னதாகவே தகவல்கள் தேவைப்பட்டால் பயிர்ச் செய்கை காலம் தொடர்பாக நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு வேண்டுகோள் விடுப்பதனூடாகப் நீர்ப்பாசன கால அட்டவணையைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.<br>2. தற்செயலாக வரண்ட காலப் பகுதியில் செய்து முடிக்கப்படும் என எதிர்பர்க்கப்படும் கட்டுமான வேலைகளை அந்தக் குறிப்பிட்ட காலப் | அழிவிற்கான அல்லது நட்டத்திற்கான நிவாரணம் கொடுக்கப் படுகின்ற போது அழிவு விபரம் அல்லது பாதிப்பு விபரம் கணக்கிட்ட கொடுக்கப் | ஒப்பந்தகாரர் மற்றும் திட்ட முகாமைத்துவ அலகு, சமூக புலனாய்வுக் குழு மற்றும் கமக்கார அமைப்பு | மாகாணப் பிரதித் திட்ட அலுவலக சுற்றுச் சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர், சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர், மற்றும் பால்நிலை அபிவிருத்தி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | பகுதிக்குள் செய்து முடிக்காமல் மேலும் காலம் நீடிக்கப்படுவதனூடாக விவசாயிகளால் பயிற் செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட முடியாமல் போகின்ற சந்தர்ப்பம் ஏற்பட்டால் விவசாயிகளிற்கு பயிர் அழிவிற்கான அல்லது நட்டத்திற்கான நிவாரணம் கொடுக்கப்பட வேண்டும். | பட வேண்டும். மற்றும் அழிவிற்கான அல்லது நட்டத்திற்கான நிவாரணம் கொடுக்கப் படுகின்ற போது அதனை இலங்கை அரசினுடைய கணக்கில் இருந்தே கொடுக்கப் பட வேண்டும். | | உத்தியோகத்தர். |
| 5. **குளங்களின் கட்டுமானம் மற்றும் மீள் கட்டுமானங்கள் தொடர்பான செயற்பாடுகள் இடம்பெறுகின்ற நேரம்** | • **மண் அகழ்தல், மற்றும் நீர் தூர் வாருதல் பணி**<br>• **தாவரங்களை அகற்றுதல் குறிப்பாக ஆழமான வேர்களைக்** | 1) குளத்தில் மிகக் குறைந்த அளவான நீர் மட்டம் இருக்கின்ற காலப் பகுதியிலேயே குளக் கட்டுமான அல்லது மீள் கட்டுமான நடவடிக்கைகளை செய்ய வேண்டும். மழை காலத்தில் கட்டுமானப் பணிகளில் ஈடுபடுவதை முற்று முழுதாக தவிர்க்க வேண்டும்.<br>2) தாவரங்களை அகற்றுகின்ற போது அழுகிய வேர்கள் மற்றும் ஏனையவற்றை அப்படியே அதன் பின்னால் விட்டுச் செல்லாமல் மிகக் கவனமாகவும் | பொறியியல் செலவு | ஒப்பந்தகாரர் | மாகாணப் பிரதித் திட்ட அலுவலக சுற்றுச் சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர், மற்றும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **நீர் மட்டம் அதிகரிக்கின்ற போது குளக் கட்டுகளினுடைய செயற்பாடுகள் மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தக் கூடும்.** | **கொண்ட தாவரங்களை அகற்றுதல்**<br>• **மதகு மற்றும் குளக் கட்டுகளை திருத்துதல்** | முழுமையாகவும் அவ்விடத்தில் இருந்து அகற்றப்பட வேண்டும்.<br>3) அத்தகைய அகற்றலுக்கு பின்னர் சரியான முறையில் அதனை பின்பற்றி மேற்பார்வை செய்ய வேண்டும்.<br>4) ஒரு கள மேற்பார்வையாளரின் மேற்பார்வையின் கீழ் குளக் கட்டுகளின் மீது செய்யப்படும் அனைத்து செயற்பாடுகளும் நடைமுறைப்படுத்தப் பட வேண்டும். | | | சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர். |
| 6. **தற்போதுள்ள வாழிடங்கள் மற்றும் மரங்களிற்கு ஏற்படும் தாக்கங்கள்** | • **மரங்களை அகற்றி அணைகளைக் கட்டுதல் மற்றும் புணரமைத்தல் அல்லது வாகனங்களினுடைய நகர்வு மற்றும் இயந்திரங்களினுடைய இயக்கம்.** | 1) மரங்களை அகற்ற வேண்டிய தேவை ஏற்படின் பொறியியலாளர், சுற்றுச் சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர், மற்றும் சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தருடன் இணைந்து அகற்றப்பட வேண்டிய மரங்கள் பற்றிய தகவல்கள், தொழில் நுட்ப ரீதியான நியாயப்படுத்தல் அறிக்கை முதலானவற்றை உறுதிப்படுத்தல், தொழிநுட்ப மாற்று முறைகள் இல்லாதது குறித்த தகவல்கள் அல்லது விபரங்கள் மற்றும் அதற்குப் பதிலீடாகச் செய்ய வேண்டிய செயற்பாடுகள் முதலானவற்றை முன்னரே அறிவிக்க வேண்டும்.<br>2) குளங்களைக் கட்டுகின்ற போது அல்லது குளங்களைப் புணரமைக்கின்ற போது, நீர் வடிகால் கால்வாய்களை அமைக்கின்ற போது, நீர்த் தொட்டி மற்றும் மதகு முதலானவற்றை கட்டுகின்ற போது மரங்களை அகற்ற வேண்டிய தேவை ஏற்படலாம் என அடையாளம் காணும் | பொறியியல் செலவு | ஒப்பந்தகாரர் | மாகாணப் பிரதித் திட்ட அலுவலக சுற்றுச் சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர், மற்றும் சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | சந்தர்ப்பங்களின் போது பின்வரும் படிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.<br>3) அடையாளம் காணப்பட்ட மரங்களினுடைய எண்ணிக்கை, மரங்களின் சுற்றளவு, மற்றும் மரங்களின் வகைகள் முதலானவற்றை கண்டறிந்து ஆவணப்படுத்த வேண்டும்.<br>4) மரங்கள் ஏதாவது அகற்றப்பட வேண்டிய தேவை ஏற்பட்டால் கட்டுமான தளத்தில் வேலைகளைத் தொடங்குவதற்கு முன்னரே சம்பந்தப்பட்ட துறை சார்ந்த திணைக்களம் அல்லது உள்ளூர் அதிகார சபையின் அனுமதியுடன் கட்டுமானத் தளங்களில் இருந்து அகற்றலாம்.<br>5) திட்டப் பகுதியில் வெட்டப்பட்ட மரங்களின் மொத்த எண்ணிக்கையின் இழப்பீடாக குறைந்தது இரண்டு மடங்கு எண்ணிக்கையிலான மரங்களை திட்டப் பிரதேசங்களில் மீள் நடுகை செய்ய வேண்டும்.<br>6) மரங்களை வெட்டுதல், மரங்கள் முறிந்து விழுதல், மரங்களிற்குப் பாதிப்பு ஏற்படல் மற்றும் தாவரங்களை அகற்றுவது முதலானவை ஏதாவது இடம் பெற்றால் மத்திய சுற்றுச் சூழல் அதிகார சபையால் முன்மொழியப்பட்ட வழிகாட்டுதல்கள், சட்டங்கள் மற்றும் பரிந்துரைகளை ஒப்பந்தகாரர்கள் கடைப்பிடிக்க வேண்டும்.<br>7) அகற்றப்பட்ட பொருளாதார மதிப்புள்ள மரங்களை அரச மரக் கூட்டுத் தாபனத்திடம் கட்டாயம் ஒப்படைக்க வேண்டம். | | | |
| 7. **ஆக்கிரமிக்கக் கூடிய தரவரங்கள்,** | • **தாவரங்களை அகற்றுதல் மற்றும்** | 1. அகற்றப் பட்ட தாவரங்களை கட்டுமானத் தளங்களில் இருந்து இன்னொரு இடத்திற்கு ஏற்றிச் செல்கின்ற போது அதனை ஏற்றிச் செல்லும் | பொறியியல் செலவு | ஒப்பந்தகாரர் | மாகாணப் பிரதித் திட்ட |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **உயிரினங்களின் வேகாமான பரவுகை** | **துப்பரவு செய்தல்**<br>• **பொருட்களைக் கொண்டு செல்லுதல் அல்லது நகர்த்துதல்** | வாகனம் நன்றாக மூடப்பட்டிருக்கிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.<br>2. அகழப்பட்ட பொருட்களை புதைக்க மிகப் பொருத்தமான இடம் என அடையாளம் காணப்பட்ட பிரதேசத்தில் புதைக்க வேண்டும். மற்றும் அகழப்பட்ட இடங்கள் அல்லது வேலைத் தளங்களில் இருந்து செல்லும் பொருட்களோடு மிக வேகமாகப் பரவி பிரதேசத்தை ஆக்கிரமிக்கக் கூடிய தாவரங்கள் அல்லது உயிரினங்கள் ஏதாவது உள்ளனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காக கட்டாயம் களக் கண்காணிப்பில் ஈடுபட வேண்டும். முடிந்த அளவுக்கு அகழ்வுக்கு உட்பட்ட பிரதேசம் அல்லது அந்தப் பகுதி கிட்டத்தட்ட பத்து (10) கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்றதா என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.<br>3. வாகனங்களின் நகர்வுகளின் போது ஆக்கிரமிக்கக் கூடிய விலங்குகள் அல்லது தாவரங்களை எடுத்துச் செல்வதைத் தவிர்ப்பதற்காக அவ்வப் போது வாகனங்களைக் கழுவுவதை ஒரு பழக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். எப்படியாயினும் இப்படியான வேலைகளைத் திட்ட பிரதேசத்தினுள் செய்யக் கூடாது.<br>4. ஆக்கிரமிக்கக் கூடிய விலங்குகள் அல்லது தாவரங்கள் எதுவும் கட்டுமானப் பிரதேசத்தில் அமைந்திருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காக கட்டுமானத் தளம் அவ்வப் போது ஆய்வு செய்யப்பட வேண்டும். | | | அலுவலக சுற்றுச் சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர், மற்றும் சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர். |
| 8. **வளி மாசடைதல்** | • **கட்டுமனப் பொருட்களை** | 1) கட்டுமான முறை அறிக்கையில், பொருட்களை எங்கே களஞ்சியப்படுத்த தீர்மானித்துள்ளமை, | பொறியியல் செலவு | ஒப்பந்தகாரர் | மாகாணப் பிரதித் திட்ட |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **குறிப்பாக தூசிகள் உருவாகுதல், அவை அருகில் உள்ள தாவரங்கள் மற்றும் குடியிருப்புக் களை பாதிப்பை உருவாக்கக் கூடும்** | **களஞ்சியப்படு த்தல் இடங்களிற்கா ன ஒழுங்கமைப்பு க்கள் மற்றும் தாவரங்களை அகற்றுதல்**<br>• **கட்டுமனப் பொருட்களை கட கொண்டு செல்லுதல் அல்லது போக்குவரத்து மற்றும் பொருட்களை களஞ்சியப்படு த்தல்**<br>• **குளக் கட்டுகள், மதகுகள், கால்வாய்கள் மற்றும்** sluice, spill, **மேம்பாடுகள்**<br>• **வேலைத் தளத்திற்குக் கட்டுமானப் பொருட்களை க் கொண்டு** | அவற்றை பராமரித்தல், கழிவுகளை சேர்த்தல் மற்றும் கழிவுகளை அகற்றுதல், தொழிலாளர் முகாம், மற்றும் வாகனங்களைத் தரித்து வைத்திருக்கும் மற்றும் பராமரிக்கும் விதம் அடங்கலான விடயங்கள் முதலானவற்றை ஒப்பந்தகாரர் தெளிவாகக் குறிப்பிட்டிருக்க வேண்டும்.<br>2) முடிந்தவரை தூசிகளை வெளியேறும் ஆதாரங்கள் இயற்கையான வடிகால் பாதைகள், மனித நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகள் இடம் பெறும் பகுதிகளில் இருந்து விலகி இருக்க வேண்டும். கனரக வாகனங்கள் மற்றும் இயந்திரங்களை கட்டுமானப் பகுதியின் மேற் புறத்தில் நிறுத்தவும்.<br>3) பயன்படுத்தப்படுகின்ற அனைத்து கனரக உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் முதலானவை தேசிய மற்றும் உள்ளுர் விதி முறைகளிற்கு முழுமையாக உட்பட்டு இணங்குபவையாக இருக்க வேண்டும்.<br>4) குறிப்பாக காற்று வீசும் நேரங்களில் அல்லது சூழ் நிலைகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ள மண் மற்றும் மணலை வாகனங்களில் ஏற்றுவதற்கு முன்னர் சிறிதளவு ஈரப்படுத்த வேண்டும்.<br>5) வரண்ட காலநிலையில் தூசி அளவு குறைவாக இருக்க தளத்தை ஒரு நாளைக்கு குறைந்தது இரண்டு அல்லது மூன்று முறை ஈரப்படுத்த வேண்டும்.<br>6) மணல், மண் மற்றும் ஏனைய கட்டுமானப் பொருட்களை ஏற்றிச் செல்லுகின்ற போது வாகனங்கள் முறையாக மூடப்பட்டுள்ளதா | | | அலுவலக சுற்றுச் சூழல் பாதுகாப்பு உத்தியோ கத்தர், மற்றும் சமூகப் பாதுகாப்பு உத்தியோ கத்தர். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **செல்லுதல் மற்றும் களஞ்சியப்படுத்தி வைத்தல்** | என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அத்தகைய கட்டுமானப் பொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களிற்கு வேகக் கட்டுப்பாடு மிக முக்கியமாகக் கருதப்படுவதுடன் அதனை நடைமுறைப்படுத்தவும் வேண்டும். அத்தகைய கட்டுமானப் பொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் மக்கள் அதிகளவு நடமாடும் பகுதிகளினூடாகச் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.<br>7) வாகனங்கள் புகையை அதிகமாக வெளியிடுவதைத் தவிர்ப்பதற்காக கட்டுமான செயற்பாடுகளோடு தொடர்புபட்ட வாகனங்கள் மற்றும் இயந்திரங்களை முறையாக பராமரிக்க வேண்டும்.<br>8) வேலைத் தளங்களிற்கு அருகாமையில் கழிவுகளை எரிக்கக் கூடாது.<br>9) ஒழுங்கமைக்கப்பட்ட கழிவகற்றல் பிரதேசம் அல்லது தளங்களிற்கு அகற்றப்படும் வரை அகற்றப்பட்ட கழிவுகளை மிகவும் குறைவாக இடையூறுகளை ஏற்படுத்தும் உள்ளூர் கழிவகற்றல் பாதைகள் மற்றும் குடியிருப்பாளர்களிற்கு மிகக் குறைந்த பட்ச குறுக்கீடுகள் உள்ள ஒரு இடத்தில் சேமிக்கப்படும்.<br>10) வேலைத் தளங்களிற்கு அருகாமையில் குடியிருப்புக்கள், பாடசாலைகள் மற்றும் ஏனைய விடயங்கள் அமையப் பெற்றிருந்தால் தூசிகள் அவ்விடங்களிற்கு பறப்பதைத் தடை செய்வதற்காகத் தூசித் தடை ஒன்றை உடனடியாக பயன்படுத்த வேண்டும். | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9. **அதிக சத்தம் மற்றும் அதிர்வுகள் முதலானவை அருகில் உள்ள கட்டமைப்புக் கள் மற்றும் வன விலங்குகளை பாதிக்க முடியும்.** | • **இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களினுடைய செயற்பாடுகள்.** <br> • **பொருட்களை களஞ்சியப்படுத்தல் மற்றும் கொண்டு செல்லுதல்.** | 1) அதிக சத்தம் அல்லது அதிக அதிர்வுகளை ஏற்படுத்தக் கூடிய வேலைகளைச் செய்கின்ற போது அந்த பாரிய சத்தம் அல்லது அதிக அதிர்வுகளை ஏற்படுத்தக் கூடிய வேலைகளை காலை 6.00 மணியில் இருந்து மாலை 6.00 மணி வரை மட்டுமே செய்ய வேண்டும் என கட்டுப்படுத்தப்பட வேண்டும். <br> 2) அனைத்து உபகரணங்களும் இயந்திரங்களும் 75 dB க்கு மிகையாகாமல் (கட்டுமானத்தின் போது) முடிந்த வரை சாதாரண நடைமுறையில் உள்ள சத்தத்துடன் இயக்கப்பட வேண்டும். கட்டுமான செயற்பாடுகளிற்கு பயன்படுத்தப்படும் இயந்திரங்களை 1996 ஆம் ஆண்டில் மத்திய சுற்றுச் சூழலால் அதிகார சபையால் வகுக்கப்பட்ட சத்தக் கட்டுப்பாட்டு விதிமுறைகளை பூர்த்தி செய்ய நாளாந்தம் கவனிக்கப்பட வேண்டும் (வர்த்தமானி இலக்கம் 924 / 12). கட்டுமானப் பணிகளை இரவு நேரத்தில் செய்தால், 50 dB க்கும் குறைவான ஒலி அளவை பராமரித்தல் மற்றும் கவனித்துக்கொள்ள வேண்டியது அவசியம். மரங்களை இயந்திரங்களைக் கொண்டு வெட்டும் போது குறுகிய காலத்திற்குள் செய்து கொள்ள வேண்டும். <br> 3) கட்டுமான உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் முறையான நிலையில் பராமரிக்கப்பட வேண்டும். ஒப்பந்தகாரர்கள் அதிக சத்தம் அல்லது அதிர்வுகளை உருவாக்கும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் பட்டியலை PE இன் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பொறியியல் செலவு | ஒப்பந்தகாரர் | மாகாணப் பிரதித் திட்ட அலுவலக சுற்றுச் சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர், மற்றும் சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10. **மேற்பரப்பு கால்வாய் வடிகால் பாதைகளை தடுக்கின்ற போது அல்லது தடைப்படுகின்ற போது சிறு குட்டைகளில் நீர் தேங்குதல் மற்றும் உள்ளூர் அளவில் வெள்ளப் பெருக்குகளிற்கு வழிவகுக்கும்.** | • **வேலைத் தளத்தை வேலை செய்வதற்காகத் தயார் செய்கின்ற போது வீதிகளை பயன்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும்.**<br>• **பொருட்கள் அல்லது கழிவுகளினுடைய குவியல்கள் அல்லது மேடுகள்**<br>• **மண்ணை அகழ்தல்**<br>• **குளக் கட்டுகள்** slui ce, **மற்றும்** spill **திருத்தம்.** | 1) வெளியேற்றப் பட்ட கழிவுகளை ஒழுங்கமைக்கப்பட்ட கழிவகற்றல் இடங்களிற்கு கொண்டு செல்லப்படும் வரை தளத்தை வேலை செய்வதற்காகத் தயார் செய்கின்ற போது வெளியேற்றப்படுகின்ற கழிவுகள், அகற்றப்படுகின்ற மணல்கள் முதலானவற்றை மிகக் குறைந்த பட்ச குறுக்கீடுகளை ஏற்படுத்தக் கூடும் என எதிர்பார்க்கப்படும் உள்ளூர் கழிவு பாதைகள், வடிகால் பாதைகள், அல்லது கழிவு வாய்க்கால்களில் தற்காலிகமாக நிரப்பப்படலாம். ஒப்பந்தகாரர்கள் வேலைத் தளத்தை சுத்தம் செய்கின்ற போது வெளியேற்றப்படுகின்ற பொருட்கள் மற்றும் கழிவுகளை சேகரித்து வைப்பதற்கான பகுதிகளை அடையாளம் கண்டு வைத்திருக்க வேண்டும்.<br>2) கழிவுகள் நிரப்பப்பட்ட இடங்களில் இருந்து ஓடும் நீர் அருகில் உள்ள நீர் நிலைகளிற்கு அல்லது நீர் வழிகளிற்கு செல்லாமல் இருப்பதைக் குறைப்பதற்காக கழிவுகள் நிறைக்கப்பட்ட இடத்தை மிகப் பொருத்தமாக முறையில் சரியாக மூடப்பட்டிருக்க வேண்டும்.<br>3) மழை நீர் தேங்குவதற்கு வழிவகுக்கும் மேற்பரப்பு வடிகால் பாதிப்புக்களைத் தவிர்க்க முடியாவிட்டால், வேலைத் தளங்களிற்கு அருகில் உள்ள இடத்தில் குளம் அல்லது வெள்ளப் பெருக்கு ஏற்படக் கூடும் அதைத் தவிர்க்க அந்த இடத்தில் இருந்து கால்வாய்க்கு தண்ணீரை பாதுகாப்பாக சரியான முறையில் அகற்றுவதற்கு ஒப்பந்தகாரர்களால் போதுமான அளவுக்கு மேற்பரப்பு வடிகால் அமைப்பை வழங்க வேண்டும். | பொறியியல் செலவு | ஒப்பந்தகாரர் | மாகாணப் பிரதித் திட்ட அலுவலக சுற்றுச் சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர், மற்றும் சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 4) மழை காலத்தில் கட்டுமானச் செயற்பாடுகள் செய்யப்படுவதைத் தவிர்க முறையான வகையில் திட்டமிடப்பட வேண்டும்.<br>5) கட்டுமானச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது நீரோடைகள் முழுமையாகவோ பகுதியளவிலோ தடைப்படலாம் அத் தடைகளைத் குறைப்பதற்காக கட்டுமானச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது மாற்று வடிகால் பாதைகள் ஒப்பந்ததாரர்களால் வழங்கப்பட்டிருக்க வேண்டும். | | | |
| **11. மண் அரிப்பு, அருகில் உள்ள நீர் நிலைகள் மற்றும் தாழ்வான பகுதிகளில் வண்டல்கள் படிதல்** | • **கட்டுமான செயற்பாடுகளின் போது குளக்கட்டுகளைக் கட்டுதல் மற்றும் கால்வாய்களை தூர் வாருதல்.**<br>• **மேல் மண்ணை அகற்றுதல்** | 1. மண் திட்டுக்கள் அல்லது மண் இருப்புக்கள் அல்லது பிற கட்டுமானப் பொருட்களை குளக் கட்டுக்கள் அல்லது குளக் கரைகளில் அல்லது நீர் வழிந்தோடும் கால்வாய்களில் வைத்திருக்கக் கூடாது.<br>2. மண் அரிப்பு ஏற்படாமல் இருப்பதைத் தவிர்ப்பதற்காக நிரந்தரமாக மண் மேடுகள், மண் திட்டுக்களை அமைத்தல் வேண்டும்.<br>3. அருகில் உள்ள நீர் ஓடைகள் மற்றும் குளங்களிற்கு வண்டல் கழிவுகள் வழிந்தோடுவதைத் தவிர்ப்பதற்காக வண்டல் கட்டுப்பாட்டு பொறிமுறை நடவடிக்கைகளை மேற்கொள்ளல். மழை மற்றும் காற்று வீசும் போது துர் நாற்றம் வீசாமல் இருக்க அல்லது துர் நாற்றம் வெளி வருவதைத் தடுக்க கழிவுகள் நிரப்பப்பட்ட இடங்களை மிகச் சரியான முறையில் நேர்த்தியாக மூடப்பட வேண்டும். | பொறியியல் செலவு | ஒப்பந்தகாரர் | மாகாணப் பிரதித் திட்ட அலுவலக சுற்றுச் சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர், மற்றும் சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12. **வண்டல்களை அகழும் போது இயற்கையாகவே மண்ணினுடைய உற்பத்தி திறன் மற்றும் மண் வளம் குறைவடையக் கூடும்.** | • **வண்டல் பொருட்களை அகற்றுதல்** | 1) வண்டல் படிவுகளை எவ்வாறு அகற்றப்பட வேண்டும் என்ற திட்டக் கையேடு அல்லது சிறந்த விழிப்புணர்வு ஒப்பந்ததாரர்களினுடைய பிரதிநிதிகளிற்கு முன் கூட்டியே வழங்கப்பட்டிருக்க வேண்டும்.<br>2) வண்டல் படிவுகளை அகற்றல் திட்டத்தில் வண்டல் கழிவுகளை அகற்றும் இடங்கள், வண்டல் கழிவுகளின் அளவுகள், வண்டல் கழிவுகளின் வகைகள் முதலான விடயங்களை தெளிவாகக் குறிப்பிட்டிருக்க வேண்டும்.<br>3) வண்டல் மண்களை அவை எடுக்கப்பட்ட இடங்களிற்கு அருகாமையில் உள்ள இடங்கள் எதிலும் போட வேண்டுமாக இருந்தால் அவர்களுடைய நிலத்தில் அல்லது காணியில் இந்த வண்டல் மண்ணைப் போடுவதற்கு அனுமதிப்பதை கிராம மக்கள் அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இருந்து அவர்களுடைய சம்மதத்தை எழுத்து மூலத்தில் பெற்றுக் கொண்டிருக்க வேண்டும் என்பது கட்டாயமானதாகும். சில வேளைகளில் அந்த வண்டல் மண்களை அல்லது வண்டல் கழிவுகளை எந்தவொரு விவசாய நிலங்களில் போடுவதாக இருந்தாலும் அவற்றை அங்கே போடுவதற்கு முன்னர் அந்த வண்டல்கள் விவசாய நிலங்களிற்கு பொருத்தமானதாக இருக்கின்றதா என்பதை உறுதிப்படுத்துவதற்காக அவை பரிசோதிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும்.<br>4) திட்டச் செயற்பாடுகள் நடைபெறும் இடங்களிற்கு அருகாமையில் வண்டல்களைப் போடுவதற்கான குழிகள் ஏதாவது உருவாக்கப்பட்டு இருந்தால் | பொறியியல் செலவு | ஒப்பந்தகாரர் | மாகாணப் பிரதித் திட்ட அலுவலக சுற்றுச் சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர், மற்றும் சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | வண்டல்களைப் போடுவதற்கான இடங்களின் மறு சீரமைப்புத் தொடர்பான விடயங்கள் கருத்திற் கொள்ளப்பட வேண்டும். | | | |
| 13. **தாவரங்கள் மற்றும் விலங்குகிற்கு பாதிப்பு ஏற்படல் குறிப்பாக இப் பகுதியில் சுற்றித் திரியும் யானைகளைப் பாதிக்கின்றது.** | • **தாவரங்களை அகற்றுதல் மற்றும் துப்பரவு செய்தல்** | 1. கட்டுமானச் செயற்பாடுகளிற்குப் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் மற்றும் வாகனங்களினுடைய வேகக் கட்டுப்பாடு மற்றும் வாகனங்களை இயக்கும் நேரம் தொடர்பாக தெளிவான அறிவுறுத்தல்கள் கொடுக்கப்பட வேண்டும்.<br>2. தாவரங்களை சுத்தம் செய்கின்ற போது விலங்குகளின் வாழ்விடங்கள் அழிக்கப்படுவதைத் தவிர்க்க, தாவரங்களை சுத்தம் செய்கின்ற போது விலங்குகளின் வாழ்விடங்கள் தொடர்பான விடயம் கவனத்திற் கொள்ள வேண்டும்.<br>3. அகற்றப்பட்ட தாவரங்கள் உடனடியாக முன் தீர்மானிக்கப்பட்ட கழிவகற்றல் தளங்களிற்கு உடனடியாக கொண்டு செல்லப்பட வேண்டும்.<br>4. எந்தவொரு நீர் நிலையிலும் மீன் பிடித்தல், மற்றும் விலங்குகளை வேட்டையாடுதல் உள்ளிட்ட தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் ஆகியவற்றை அகற்றி சேதப்படுத்துவதைத் தவிர்க்க ஒப்பந்தகாரர் முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகளை அவர்கள் எடுப்பார்கள்.<br>5. எந்த நேரத்திலும் கட்டுமானப் பகுதிக்கு அருகில் ஏதேனும் வன விலங்குகள் காணப்பட்டால், ஒப்பந்ததாரர் அதைக் கண்டுபிடித்தவுடன் உடனடியாக பொறியியலாளருக்கு அறிமுகம் செய்து அதைக் அணுகுவதற்கு பொறியாளரின் அறிவுறுத்தல்களை பின்பற்ற வேண்டும். | பொறியியல் செலவு | ஒப்பந்தகாரர் | மாகாணப் பிரதித் திட்ட அலுவலக சுற்றுச் சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர், மற்றும் சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 6. பொறியியலாளர் அருகில் உள்ள வனத் திணைக்களம் அல்லது வன ஜீவராசிகள் திணைக்களங்களிற்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும் அல்லது அறிவிக்க வேண்டும். தேவைப்பட்டால் வனத் திணைக்களம் அல்லது வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.<br>7. திட்ட வேலைகளைப் பகல் நேரங்களில் செய்வதற்கு பரிந்துரைக்கப் படுகின்றது.<br>8. கட்டுமான நடவடிக்கைகளின் போது யானைகள் நீர் அருந்துவுதற்கு பயன்படுத்தும் பாதை தடைப்படாமல் இருக்கின்றது என்பதை ஒப்பந்தகாரர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.<br>9. தொழிலாளர்களிற்கு தாங்கள் பணி புரியும் பகுதியின் பாதுகாப்பு நிலைகள் குறித்து சிறந்த விழிப்புணர்வு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். மற்றும் வேலை செய்யும் இடங்களில் அல்லது அண்மித்த பிரதேசங்களில் வேட்டையாடுதல் முதலான செயற்பாடுகள் ஈடுபட முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.<br>10. வன ஜீவராசிகள் திணைக்களத்தின் அனுமதி இல்லாமல் சுற்றியுள்ள பிரதேசங்கள் அல்லது திட்டப் பிரதேசங்களில் இருந்து எந்தக் காரணங்களைக் கொண்டும் விலங்குகள், தாவரங்கள் மற்றும் இயற்கை விடயங்களை அகற்றக் கூடாது. | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14. **நீரின் தரம் பலவீனமடை தல்** | • **இயந்திரங்களி ல் இருந்து வெளியேறும் எரிபொருள் கசிவுகள்**<br>• **தாவரங்களை அகற்றுதல்**<br>• **குளக்கட்டுகள் மற்றும்** sluice, spill, **திருத்தல்.** | 1) மண் நிரப்புதல் மற்றும் மண் துார்தல் முதலானவற்றை மொன்சூன் அல்லது பருவப் பெயர்ச்சிக் காலங்களில் தவிர்த்துக் கொள்ளவும். அல்லது அந்த வேலைகளை தொடங்கிச் செய்து கொண்டு இருந்தால் பின்னர் அவற்றை தார்ப் பாய்கள் அல்லது பிளாஸ்டிக் தாள்களினால் மூடப்பட வேண்டும்.<br>2) கட்டுமான பணிகளில் மீளப் பயன்படுத்தக் கூடிய கெட்டுப் போன பொருட்கள் மற்றும் மீண்டும் பயன்படுத்தக் கூடியவற்றிற்கு அதிகப்படியாக முன்னுரிமை கொடுக்க வேணடும்.<br>3) நீர் நிலைகளிற்கு செல்லும் வடிகால் வழியாக தற்காலிக மண் பொறிகள் அல்லது வண்டல் படுக்கைகளை நிறுவவும்.<br>4) நீர் நிலைகளிற்கு இட்டுச் செல்லும் வடிகால்களில் இருந்து எரி பொருட்கள் மற்றும் lubricants களுக்கான சேமிப்புப் பகுதிகளை வைக்கவும்.<br>5) கட்டுமானப் பிரதேசங்களில் இருந்து வெளியேறும் கழிவுகளை நியமிக்கப்பட்ட அல்லது ஒதுக்கப்பட்டுள்ள இடங்களினுாடாக அப்புறப்படுத்தவும்.<br>6) நீர்ப்பாசன வேலைகள் மிகக் குறைந்த நீரோட்ட காலங்களில் மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட வேண்டும். | பொறியிய ல் செலவு | ஒப்பந்தகா ரர் | மாகாணப் பிரதித் திட்ட அலுவலக சுற்றுச் சூழல் பாதுகாப்பு உத்தியோ கத்தர், மற்றும் சமூகப் பாதுகாப்பு உத்தியோ கத்தர். |
| 15. **திண்மக் கழிவகற்றல்** | • **வேலைத் தளத்தை சுத்தம் செய்தல்**<br>• **தொழிலாளின் முகாம்களில்** | 1. கட்டுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்ற போது ஏற்படக் கூடிய எல்லாக் கழிவுகளின் பட்டியல் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அந்தப்பட்டியலில் கழிவுகளின் எல்லா வகைகளும் உள்ளடக்கப்பட வேண்டும். அதன் பின்னர் உள்ளுர் அதிகார சபையிடம் இருந்து | பொறியிய ல் செலவு | ஒப்பந்தகா ரர் | மாகாணப் பிரதித் திட்ட அலுவலக சுற்றுச் சூழல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **இருந்து வெளியேறும் கழிவுகள்.** | அனுமதியைப் பெற்றதன் பின்னர் அவர்களின் வழிகாட்டல்களின் கீழ் அடையாளம் காணப்பட்ட கழிவகற்றல் தளங்களிற்கு ஒவ்வொரு கழிவுகளும் தனித் தனியாக அகற்றப்பட வேண்டும்.<br>2. அபாயகரமானவை என ஏதாவது கழிவுகள் அடையாளம் காணப்பட்டால் அவற்றை உள்ளூர் அதிகார சபையின் அனுமதி பெறப்பட்டதன் பின்னர் விசேட கவனிப்புடன் கையாளப்பட வேண்டும்.<br>3. கட்டுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்ற போது வேலைத் தளத்தில் இருந்து கழிவகற்றல் இடத்திற்குக் கொண்டு செல்லப்படும் மற்றும் வெளியேற்றப்படுகின்ற கழிவுகளின் தொகை, கழிவுகள் கொண்டு செல்லப்படும் இடங்கள் மற்றும் கழிவுகளின் வகைகள் முதலானவை ஒப்பந்ததாரர்களால் ஆவணப்படுத்தப்படும்.<br>4. வேலைத் தளத்தில் இருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவுகளை உள்ளூர் அதிகார சபையினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களிற்கு அமைய அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இடங்களிற்கு நாளாந்தம் கழிவுகளை அகற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட இடங்களில் கழிவுகளை அகற்றப்பட வேண்டும் என்பது குறித்து வேலைத் தளத்தில் உள்ள அனைத்து தொழிலாளர்களிற்கும் தெளிவாக அறிவுறுத்தப்பட வேண்டும். புகைப் பிடித்தல் மற்றும் சிகரெட் துண்டுகளை அகற்றுதல் எவ்வாறு என்பது தொடர்பாக கடுமையான அறிவுறுத்தல்களை அனைத்து | | | பாதுகாப்பு உத்தியோகத்தர், மற்றும் சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | தொழிலாளர்களிற்கும் தெளிவாக முன் கூட்டியே வழங்க வேண்டும். | | | |
| 16. பொது (எல்லா வகையான இடர்கள், பிரச்சினைகள், மற்றும் disturbance) | | 1) கட்டுமானச் செயற்பாடுகளைச் செய்கின்ற போது ஏற்படக் கூடிய இடையூறுகள் மற்றும் பால் நிலைக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான பிரச்சினைகளைப் ஏற்பட்டால் அதனை புகார் செய்வதற்கும் மனக் குறைகளைத் தீர்ப்பதற்கும் என மனக் குறைகளை தீர்க்கும் பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.<br>2) மக்கள் மத்தியில் மனக் குறைகளை தீர்க்கும் பொறிமுறை பற்றிய விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட வேண்டும். அத்துடன் புகார் அளிக்கக் கூடிய விபரங்களை பொது இடங்களான பொது மண்டபங்கள், கிராம அலுவலர் அலுவலகங்கள், கமநல சேவை நிலையங்கள் முதலான இடங்களில் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.<br>3) கட்டுமான நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு செயற்பாடுகளின் போது தொழிலாளர்கள் வெளி இடங்களில் இருந்து கொண்டு வரப்படுவதனால் பால் நிலைக்கு எதிரான வன்முறைகள் அல்லது ஏற்படக் கூடியவை என எதிர்பார்க்கப்படும் ஏனைய பிரச்சினைககள் தொடர்பாக முன் கூட்டியே பிரதேச மக்களிற்கு விழிப்புணர்வுளினூடாக வெளிப்படுத்தல் வேண்டும். | மாகாணப் பிரதித் திட்ட அலுவலக பால்நிலை அபிவிருத்தி உத்தியோகத்தர், சுற்றுச் சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர், மற்றும் சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர். | மாகாணப் பிரதித் திட்ட அலுவலக பால்நிலை அபிவிருத்தி உத்தியோகத்தர், சுற்றுச் சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர், மற்றும் சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர். | மாகாணப் பிரதித் திட்ட அலுவலக பால்நிலை அபிவிருத்தி உத்தியோகத்தர், சுற்றுச் சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர், மற்றும் சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர். |
| 17. தொழிலாளர்கள் வெளி இடங்களில் இருந்து வருகின்ற | | 1) ஒப்பந்தகாரர்கள் முடிந்த வரை உள்ளூர் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்த வேண்டும். ஒப்பந்ததாரர்கள் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துகின்ற போது ஒப்பந்தகாரர்கள் பெண்களிற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். | ஒப்பந்தகாரர் | மாகாணப் பிரதித் திட்ட அலுவலக பால்நிலை அபிவிருத் | மாகாணப் பிரதித் திட்ட அலுவலக பால்நிலை அபிவிருத் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **போது ஏற்படக் கூடிய பிரச்சினைளகள் (உதாரணம்: பால்நிலையைய அடிப்படையாகக் கொண்ட வன்முறைகள்)** | | 2) தொழிலாளர்களினுடைய நடத்தை விதி முறைகள் அவர்களுடைய தொழில் ஒப்பந்தத்தின் ஒரு அங்கமாக அமையப் பெற்றிருக்க வேண்டும். பால் நிலைக்க எதிரான வன்முறைகளை எவ்வாறு தடுப்பது மற்றும் அதனை தீர்ப்பதற்கு எவ்வாறு அணுகுவது மற்றும் அதில் தொழிலாளர்களினுடைய நடத்தை மற்றும் செய்யும் தொழிலில் அவர்களின் வேலை ஈடுபாடு முதலானவை தெளிவாக விபரிக்கப்பட்டிருக்க வேண்டும்.<br>3) ஒப்பந்தகாரர்களால் ஏதாவது பாலியல் துன்புறுத்தல்கள் அல்லது பால் நிலைக்கு எதிரான வன்முறைகள் ஆகியவை சமுதாயத்திற்கு ஏற்படுவதைத் தடுப்பதற்கான செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற போது தொழிலாளர்கள் அதற்கு இணக்கம் தெரிவிக்கா விட்டால் அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். உதாரணம்: அவர்களை வேலையில் இருந்து நீக்குதல். | | தி உத்தியோகத்தர், சுற்றுச் சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர், மற்றும் சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர். | தி உத்தியோகத்தர். |
| **18. பொது மற்றும் தொழில் பாதுகாப்பு அபாயங்கள் மற்றும் தொழிலாளர்கள் வெளி இடங்களில் இருந்து வருகின்ற போது ஏற்படக்** | • **வேலைத் தளத்தை சுத்தம் செய்தல், இயந்திரங்கள் மற்றும் பொருட்களை தரித்து வைத்திருத்தல் மற்றும் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்** | **பயிற்சிகள்**<br>1) கட்டுமான வேலைகள் ஆரம்பிப்பதற்கு முன்னதாக வேலைத் தளத்தில் எல்லா வேலையாட்களிற்கும், அதாவது முகாமையாளர்கள் உள்ளடங்கலாக அனைவருக்கும் தொழில் சுகாதாரம், பொது பாதுகாப்பு இடையூறுகள் மற்றும் முகாமைத்துவ மதிப்பீடகள், அளவீடுகள் தொடர்பாக பயிற்சி வகுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளது என்பதுடன் எல்லா வேலையாட்களும் அதில் பங்கு பற்றி உள்ளார்கள் என்பதையும் ஒப்பந்தகாரர் சரியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.<br>**தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் (பீ. பீ. ஈ)** | பொறியியல் செலவு | ஒப்பந்தகாரர் | மாகாணப் பிரதித் திட்ட அலுவலக சுற்றுச் சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர், சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர், |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **கூடிய பிரச்சினைகள் (உதாரணமாக பால்நிலைக்கு எதிரான வன்முறைகள்)** | • **பொருட்களை கொண்டு செல்கின்ற போது போக்குவரத்திற்காக கனரக வாகனங்களை பயன்படுத்துகின்ற போது வாகன நெரிசல்கள் ஏற்படக் கூடும்.**<br>• **கட்டுமான செயற்பாடுகளிற்கு இயந்திரங்களைப் பயன்படுத்துகின்ற போது பாரிய சத்தம் மற்றும் அதிர்வுகள் ஏற்படக் கூடும்.** | 1. எல்லா வேலையாட்களிற்கும் தேவைப்படுகின்ற அடிப்படையான தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட வேண்டும் (தலை பாதுகாப்புக் கவசம், பாதுகாப்பான பாத அணிகள், மற்றும் தெரியக் கூடிய வகையிலான ஜக்கட்ஸ்கள் (high visibility jackets) முதலானவை உள்ளடக்கப்பட வேண்டும்). யாராவது வருகையாளர்கள் வேலைத் தளத்திற்கு வந்தால் அவர்களிற்கும் தனிப்பட்ட பாதுகாப்பு அங்கிகள் மற்றும் உபகரணங்களை வழங்க வேண்டும்.<br>2. கையுறைகள், காதுறைகள் (ம.்.ப்ஸ்), தூசியைத் தவிக்க அணியப்படும் முக மூடிகள், பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் பாதுகாப்பிற்குத் தேவை என கருதப்படும் ஏனைய உபகரணங்களையும் தள அலுவலகத்தில் மேலதிகமாகக் கையிருப்பில் வைத்துக் கொள்ள வேண்டும்.<br>3. தொழிலாளர்கள் அணிந்து கொள்ள வேண்டிய தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் எவை எவை என்பதை சரிபார்ப்பதற்கான பட்டியல் ஒன்று தயார்க்கப்பட்டு இருக்க வேண்டும்.<br>**வன விலங்குகளிடம் இருந்து பாதுகாப்பு**<br>1. யானைகள் மற்றும் பாம்புகள் முதலான வன விலங்குகளிடம் இருந்து எவ்வாறு பாதகாத்துக் கொள்ளல் மற்றும் வன விலங்குகளால் ஏற்படக் கூடும் என எதிர்பார்க்கப்படும் தகவல்களை ஒப்பந்ததாரர் தன்னுடைய தொழிலாளர்களிற்கு தெளிவாகக் கற்பிக்க வேண்டும். பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் தொடர்பாக தொழிலாளர்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும். | | | மற்றும் பால்நிலை அபிவிருத்தி உத்தியோகத்தர். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 2. மாலை ஆறு மணிக்கு பின்னர் தொழிலாளர்களினுடைய செயற்பாடுகள் குறித்து திட்ட வட்டமான மற்றும் கடுமையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும். மற்றும் அவர்களை சரியாகக் கண்காணிக்கவும் வேண்டும். குறிப்பாக தொழிலாளர்கள் தனிமைப்படுத்தப்பட்ட அல்லது ஒதுக்கப்பட்ட இடங்களில் தனி ஒருவராக எந்த நேரங்களிலும் வேலை செய்தலாகாது.<br>3. காணிகளைச் சுத்தம் செய்கின்ற போது பாம்புகள் இருக்கக் கூடும் என்பதால் அவ் வேலைகளில் ஈடுபடுபவர்கள் தனி நபர் பாதுகாப்பு உபகரணங்களைக் கட்டாயமாக அணிந்திருக்க வேண்டும்.<br>**வேலைத் தளத்தை வரையறுத்தல் மற்றும் அவதானக் குறியீடுகள்**<br>1. வேலை இடம்பெறும் இடங்கள் குறிப்பாக கட்டுமானம் இடம்பெறும் இடங்களை அடையாளப்படுத்த பாதுகாப்பு அடையாளக் கூம்புகள், ஒளி சமிக்ஞைகள் அல்லது விளக்குகள், செம் மஞ்சள் மற்றும் வெள்ளை நிறக் கோடுகள் மற்றும் தடுப்பு வேலிகள் அல்லது மறைப்புக்கள் முதலானவை பயன்படுத்தி இருக்க வேண்டும். அத்துடன் வேலை செய்யும் பகுதிகள் அல்லது வேலை செய்யும் வலயங்கள் குறித்து அப்பகுதியில் வரும் வாகனப் போக்குவரத்து நெரிசல் மற்றும் பாதசாரிகளிற்குத் தெரிவிக்க வேண்டும்.<br>2. இது போன்ற ஆபத்துக்களில் இருந்து பொது மக்கள் விலகி பாதுகாப்பாக இருக்கவும், குறிப்பிட்ட ஆபத்துக்கள் குறித்து பொது | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | மக்களிற்குத் தெரிவிக்கவும் தேவையான இடங்களில் பொருத்தமான அவதான எச்சரிக்கைக் குறியீடுகள் மற்றும் தகவல் பலகைகள் முதலானவை வைக்கப்பட்டிருக்க வேண்டும்.<br>3. வாகனங்களில் அளவுக்கு அதிகமான பொருட்களை ஏற்றிச் செல்லுதல் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.<br>4. பொது மக்களினுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக கட்டுமானக் கழிவுகளை முடிந்த வரை இருபத்தி நான்கு மணித்தியாலயங்களிற்குள் (24) அகற்றப்பட வேண்டும்.<br>5. பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பாதுகாப்புப் பரிசோதனைப் பட்டியல் ஒன்று பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும், அவை ஒவ்வொன்றாகச் சரிபார்க்கப் பட்டிருக்க வேண்டும், அவை ஒவ்வொன்றும் சரியான வகையில் பயன்படுத்தப்படுகின்றதா, அவை ஒவ்வொன்றும் பொருத்தமான முறையில் வழங்கப்பட்டுள்ளனவா என்பது பற்றி பரிசோதிக்கப் பட வேண்டும்.<br>**பாதுகாப்பு உபகரணங்கள்**<br>1. வேலைத் தள வலயத்தில் தொழிலாளர்கள் பயன்படுத்தும் கருவிகள், உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் முதலானவற்றை தவறாகப் பயன்படுத்துகின்ற போது அல்லது அந்த இயந்திரங்கள் பழுதடைந்து இருந்தால் அல்லது செயலிழந்து இருந்தால் அவை ஆபத்தை ஆபத்தை ஏற்படுத்தக் கூடும். அதன் காரணத்தால் தொழிலாளர்கள் பயன்படுத்தும் கருவிகள், உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | முதலானவற்றை பயன்படுத்துவதற்கு முன்னர் அவற்றை சரி பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற அறிவுறுத்தல் வழங்கப்பட வேண்டும். மற்றும் இது தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். மேலும் கருவிகள், உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களில் தேய்வுகள், காணமல் போன பாகங்கள், மற்றும் இயந்திரங்களில் ஏற்படக் கூடிய மின் ஒழுக்குகள் முதலானவற்றின் மூலங்கள் மற்றும் விடயங்களை பரிசோதிக்க வேண்டும். அது தொடர்பாக பயிற்சி பெற்ற தொழிலாளர்களாலேயே அத்தகைய இயந்திரங்களை அணுகவோ சரிபார்க்கவோ முடியும்.<br>**அவசரகால நடைமுறைகள்**<br>2. ஒரு முதல் உதவி சேவையானது வேலைத் தளத்தினுள் கட்டாயமாக அமையப் பெற்றிருக்க வேண்டும்.<br>3. சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு பயிற்சியின் போது தற்செயலாக ஒரு அவசர நிலை ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும், யாருக்கு அறிவிக்க வேண்டும், அவசர நிலை ஏற்பட்டால் எங்கே கூடுவது, செல்வது போன்ற விடயங்களை தொழிலாளர்களிற்கு தெளிவாக விளங்கப்படுத்த வேண்டும். இந்தத் தகவல்களை தொழிலாளர்கள் வேலைத் தளங்களிற்குச் செல்வதற்கு முன்னர் வேலைத் தளத்திற்குப் பொறுப்பான அல்லது தொடர்புபட்ட முகாமையாளரால் ஊழியர்களிற்குத் தெரிவிக்க வேண்டும்.<br>4. ஒப்பந்த காரர்கள் எப்போதுமே ஒரு முதல் உதவி பெட்டியை வேலைத் தளத்தில் எப்போதும் | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | கிடைக்கக் கூடிய வகையில் பராமரித்து வைத்திருக்கிறார்களா என்பதை எப்போதும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.<br>**தகவல் முகாமைத்துவும்**<br>1. பால் நிலைக்கு எதிரான வன்முறைகள் உட்பட பாதிக்கப்பட்ட பொது மக்கள் மற்றும் அருகில் உள்ள பாதிக்கப்பட்ட சமுதாயங்களினுடைய புகார்களைப் பெற்றுக் கொள்ளுதல், அவற்றை ஆவணப் படுத்தல், புகார்களை முறையாத் தீர்த்து வைத்தலுக்கான பொறிமுறை ஒன்றை ஒப்பந்ததாரர்களின் நடைமுறைகளில் ஒன்றாக விருத்தி செய்தல்.<br>2. காட்டுமானம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதி மற்றும் கட்டுமானச் செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் மக்களிற்கு கிடைக்கும் சேவைகள் மற்றும் வசதி வாய்ப்புகளிற்கு ஏற்படக் கூடிய தடங்கல்கள் முதலான விடயங்கள் உள்ளடங்கிய தகவல்களை தகவல் பலகைகள் மற்றும் துண்டுப் பிரசுரங்களினூடாக உள்ளூர் சமுதாய மக்கள் மற்றும் கிராம மக்களிற்கு முன்னேற்பாடாக வழங்குதல்.<br>**வெளியில் இருந்து தொழிலாளர்களைக் கொண்டு வந்து வேலைக்கு அமர்த்துவதனால் ஏற்படக் கூடிய பிரச்சினைகள் (உதாரணம்: பால் நிலைக்கு எதிரான வன்முறைகள்)**<br>1. வெளியில் இருந்து தொழிலாளர்களைக் கொண்டு வந்து வேலைக்கு அமர்த்துவதனால் ஏற்படக் கூடிய பிரச்சினைகளைக் குறைப்பதற்காக முடியுமான வரை உள்ளூரில் இருந்தே | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | தேவையான தொழிலாளர்களை கண்டறிந்து அவர்களிற்கு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல் குறிப்பாக முன்னுரிமை அளித்து பெண்களையும் வேலைக்கு அமர்த்தி வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்க ஒப்பந்ததாரர்கள் முன் வர வேண்டும்.<br>2. தொழிலாளர்களினுடைய நடத்தை விதி முறைகள் அவர்களுடைய தொழில் ஒப்பந்தத்தின் ஒரு அங்கமாக அமையப் பெற்றிருக்க வேணடும். பால் நிலைக்க எதிரான வன்முறைகளை எவ்வாறு தடுப்பது மற்றும் அதனை தீர்ப்பதற்கு எவ்வாறு இவர்களை அணுகுவது மற்றும் அதில் தொழிலாளர்களினுடைய நடத்தைக் கோலங்கள் மற்றும் செய்யும் தொழிலில் அவர்களின் வேலை ஈடுபாடு முதலானவை தெளிவாக விபரிக்கப்பட்டிருக்க வேண்டும்.<br>3. ஒப்பந்தகாரர்களால் ஏதாவது பாலியல் துன்புறுத்தல்கள் அல்லது பால் நிலைக்கு எதிரான வன்முறைகள் ஆகியவை சமுதாயத்தினருக்கு ஏற்படுவதைத் தடுப்பதற்கான செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற போது தொழிலாளர்கள் அதனைத் தடுக்க இணக்கம் தெரிவிக்கா விட்டால் அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். உதாரணம்: தொழிலாளர்களை உடனடியாக வேலையில் இருந்து நீக்குதல். | | | |
| 19. **தொழிலாளர் முகாம் அமைவிடப் பகுதிகளில் சுகாதாரம், பாதுகாப்பு** | • **எல்லா வகையான நோய்களையும் கட்டுப்படுத்தல்** | **தொழிலாளர் முகாம் கட்டுமானம்**<br>1) கட்டுமான தொழிலாளர்களிற்கு தொற்று நோய்கள் பரவுவதைக் கட்டுப்படுத்த கட்டுமானத் தளங்களில் அமைந்துள்ள தொழிலாளர் முகாம்களில் போதுமான சுகாதார வசதிகள் இருக்க வேண்டும். | பொறியியல் செலவு | ஒப்பந்தகாரர் | மாகாணப் பிரதித் திட்ட அலுவலக சுற்றுச் சூழல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **முகாமைத்துவம்.** | | மல சலக் கழிவுகளை சரியான முறையில் நிர்வகிக்கப்பட வேண்டும். சரியான முறையில் நிர்வகிக்கப்பட்டால் அது உயிரினங்னளின் வாழிடத்தை எந்த வகையிலும் மாசுபடுத்தலாகாது.<br>2) வெளி இடங்களில் இருந்து தொழிலாளர்களைக் கொண்டுவந்து அவர்களை தொழிலாளர் முகாம்களில் தங்க வைப்பதைத் தவிர்த்து இயலுமான வரை உள்ளூரில் உள்ள தொழிலாளர்களை அழைத்து அவர்களை வேலைக்கு அமர்த்துவதன் மூலம் உள்ளூர் மக்களால் சமூக பொருளாதார நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். வேறு வழி இல்லை என்றால் மட்டுமே வெளி இடங்களில் இருந்து தொழிலாளர்களைக் கொண்டு வர வேண்டும்.<br>3) உள்ளூர் மக்களுடைய பிரதேசத்துக்குள் தொழிலாளர் தங்கு முகாம்களை அமைக்காது, வெளியே குத்தகைக்கு அல்லது காணியை விற்க விரும்புபவர்களிடம் இருந்து நிலங்களைப் பெற்று அங்கே தொழிலாளர் முகாம்களை அமைக்க வேண்டும். அப்படி அமைக்கப்பட்ட தொழிலாளர் முகாம்களில் தொழிலாளர் சட்டத்தின் பிரகாரம் போதுமான அளவு சுகாதாரம், கழிவு அகற்றல், மற்றும் தேவைப்படும் வசதிகளை வழங்க வேண்டும்.<br>4) வேலை முடிந்த பின்னர் தங்கு முகாம்களை அகற்ற வேண்டும். பின்னர் அந்த இடத்தில் தாவரங்கள் அல்லது மரங்களை நட வேண்டும்.<br>5) எச். ஐ. வி அல்லது எயிட்ஸ் தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை அவர்களிற்கு நடாத்துதல். | | | பாதுகாப்பு உத்தியோகத்தர், சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர், மற்றும் பால்நிலை அபிவிருத்தி உத்தியோகத்தர். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 6) எல்லா வகையான தொற்று நோய் அல்லது தொடர்பாடல் மூலம் பரவும் நோய்கள் முதலானவற்றைக் குறைப்பதற்காக சுகாதாரம், மற்றும் பாதுகாப்பு வழிகாட்டுதல்களைப் பின்பற்றுதல் (உதாரணம்: கொரோனா தொற்றைக் குறைப்பதற்கான வழிகாட்டுதல்கள்). | | | |